யிலே உள்ள இந்த ஆட்சிதான் நிறைவேற்றியிருக்கிறது என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதிலேயும் கடன்பாக்கி உள்ளவர்கள் நிற்க முடியாதே என்று சொன்னார்கள். கடன் பாக்கி உள்ளவர்கள் தேர்தலிலே தான் போட்டி இட முடியாது என்பது விதி. ஆனால் இந்த நிவாரணத்தின் மூலமாக அவர்கள் தகுதி உடையவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கு முன்னதாக, கடன் பாக்கி எவ்வளவு இருக்கிறதோ, அவற்றை செலுத்திவிட்டு, பின்னாலே தகுதி உள்ளவர்கள் என்கிற காரணத்திலே தேர்தல் முடிந்த பின்னால், அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. நண்பர் ஆல்போன்ஸ் அவர்கள் அதிக ஆர்வம் இதிலே காட்டுகிற காரணத்தினாலே அவர்களுக்கு வேண்டிய நபர்கள் யாராவது இத்தகைய நிலையில் இருப்பார்களேயானால் ஆல்போன்ஸ் அவர்கள், அவர்களுக்கு உதவி செய்து பின்னாலே பணத்தை பெற்றுக் கொள்ளலாம். அப்படி பின்னாலே பெறுவதற்கான உறுதியை இந்த அரசு நிச்சயமாக வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொன்னார், ' சித்திரத்தை வாங்கிக் கொடுத்து கண்ணை எடுத்து விடுவது போல என்று, சொன்னார்கள் ' சித்திரத்தை நாங்கள் வழங்கியிருக்கிறோம், தயவுசெய்து கண்ணை மூடிக்கொள்ளாதீர்கள் என்று மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த நேரத்திலே நான் உங்களுக்கெல்லாம் தெரிவித்து இதுபற்றி எவ்வளவு விளக்கம் வேண்டுமானாலும் இந்த அரசு தருவதற்கு தயாராக இருக்கிறது என்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்களும் இது தொடர்பாகத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். அவர்கள் பெயரும் இத்தோடு இணைக்கப்படுகிறது.

(ஊ) 20–8–1990 ஆம் நாளன்று ஓர் ஊர்வலம் நடைபெற்றதை யொட்டி முன்னெச்சரிக்கையாகச் சிலர் கைது செய்ய பெற்றுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னபோது முன் எச்சரிக்கை நடவடிக்கையாக சிலர் கைது செய்யப்பட்டது பற்றி சொன்னார்கள். நேற்று ஊர்வலம் நடந்த பிறகும் கூட, நான் குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால் பி-1 போலீஸ் ஸ்டேஷனிலே கூட ஆபிரகாம் என்று சொல்லப்படக்கூடிய எங்களுடைய தோழர் கைது செய்யப்பட்டிருக்கிறார். எனவே பின்னாலே கூட, ஒரு பேரணிக்காக இவ்வளவு முன் எச்சரிக்கை வேண்டுமா என்பது

எங்களுக்கு ஐயப்பாடாக இருக்கிறது. இருந்தும் இவைகள் நடைபெற்றிருக்கிறது. அதை உங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழகத்தினுடைய பண்புகள் மீது அதிக அக்கறை உள்ள இலக்கியச் செல்வர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்படுவது அவர்களுடைய கட்சி ஆட்சியிலிருந்த அந்தக் காலக் கட்டத்திலே இருந்து நடந்து வருகிற ஒருவாடிக்கைதான். அது மாத்திரம் அல்ல, பெரிய தலைவர்கள் டெல்லியிலிருந்து வந்தாலும் முன்னெச்சரிக்கையாகப் பலபேர்கள் கைது செய்யப்படுவதும் வாடிக்கை. அதைப் போலத்தான் முன்னெச்சரிக்கையாக இது நடைபெற்றிருக்கிறது. இருந்தாலும் விபரீத விளைவுகள் எல்லாம் ஏற்படப் போகிறது என்று சொன்னதன் காரணமாகவும், முதலமைச்சரையே கோட்டைக்குள் அனுமதிக்கக் கூடாது என்று பேசியதன் காரணமாகவும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கும்படியும் நேரிட்டது. ஊர்வலம் நடந்த பிறகுகூட சிலர் கைது செய்யப் பட்டிருப்பதாக அவர் இங்கே சொன்னார். ஊர்வலம் நடந்த பிறகும்கூட செருப்புகளும், கற்களும் மிகப் பண்பான முறையிலே வீசப்பட்டன என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

உளுநதுார்பேட்டையில் ஏற்பட்ட வெடி விபத்தில் பலர் மரணமுற்றது, காயமுற்றது மற்றும் பலத்த சேதங்கள் விளைந்துள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு எஸ். டி. உகம்சந்த் மற்றும் திரு சி. கோவிந்தராஜன் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஜூன் மாதம் 1990இல் உளுந்தூர்பேட்டையிலே நடந்த வெடி விபத்தில் பலர் மரணமுற்றும், காயம் அடைந்தும், பலத்த சேதங்கள் விளைந்ததன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்துப் பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கோரி அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்துச் சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன். திரு எஸ். டி. உகம்சந்த் இடத்தில் இல்லை. திரு. சி. கோவிந்தராஜன்.

* திரு சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய கோர விபத்து உளுந்தூர்பேட்டையிலே